## இலகு புகையிரத போக்குவரத்து செயற்திட்டம் - 2020

இலகு புகையிரத போக்குவரத்து செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 மார்ச் 11 ஆம் திகதிய செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் II ஆம் பின்னிணைப்பின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. செயற்திறனான போக்குவரத்து இயலளவினை மேம்படுத்துதல் மற்றும் போக்குவரத்து தேவையின் விரைவான அதிகரிப்பு காரணமாக போக்குவரத்து நெரிசலிற்கு உதவுவது பெரும் சவாலாகவுள்ள கொழும்பு பெருநகர் பகுதியில் இலகு புகையிரத போக்குவரத்தினை (LRT) அறிமுகப்படுத்துவதன் மூலம் போக்குவரத்து பிரச்சனையை குறைப்பதன் ஊடாக நகர சுற்றாடலை மேம்படுத்துவதற்கு பங்களித்தல் என்பன இச் செயற்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஜப்பான் யென் 246,641 மில்லியனாக காணப்பட்டதுடன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 286,839 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 200,215 மில்லியன் தொகையை ஜேஐசீஏ (JICA) 2019 – 2024 காலப்பகுதியின் போது 06 பகுதிகளின் கீழ் வழங்குகின்றது. எஸ்எல் - பி119 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பகுதி ஒன்றின் (01) பிரகாரம் பகுதி ஒன்றின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 59,100 மில்லியனுக்கு சமனான ஜப்பான் யென் 41,252 மில்லியன் ஆகும். அதில் ரூபா 43,037 மில்லியனுக்கு சமனான ஜப்பான் யென் 30,040 ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2019 மார்ச் 25 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டு குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கணக்கீட்டு கொள்கை இல. 01 இற்கு முரணாக முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 1,069.32 மில்லியன் தொகையான ஆலோசனைச் செலவினங்கள் மீளாய்வாண்டில் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 1,069.32 | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 01 இல் வெளிப்படுத்தப்பட்டவாறு ஆலோசனை செலவினங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | விலைப்பட்டியல் திகதியில் வெளிப்படுத்தப்பட்ட spot விகிதத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயங்களை மாற்றிய போது ரூபா 102.97 மில்லியன் அந்நிய செலவானி கொடுக்கல் வாங்கல் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 102.97 | கருத்துரை வழங்கப்படவில்லை. | வெளிநாட்டு நடைமுறை கொடுக்கல் வாங்கல்கள் பணம் செலுத்தும் திகதியில் அறிக்கையிடப்பட்ட சுட்டிக்காட்டல் நாணயமாற்று விகிதத்தைப் பயன்படுத்தி மாற்றப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் யூலை முதல் திசெம்பர் வரையிலான மாதங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 744.93 மில்லியன் தொகையான ஆலோசனைக் கட்டணம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நடைமுறைப் பொறுப்புக்கள் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | 744.93 | கருத்துரை வழங்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய தொகை பொறுப்புகளின் கீழ் காட்டப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 44.04 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை சொத்தாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக செலவினங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 44.04 | கருத்துரை வழங்கப்படவில்லை. | நடைமுறை சொத்துகளின் கீழ் செலவினம் காட்டப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கூறு | செயற்பாடு | கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | காணி சுவீகரிப்பு | காணி சுவீகரிப்பு | சுவீகரிக்கும் காணிகள் இனங்காணப்படாமை மற்றும் காணி சுவீகரிப்பு செயன்முறையின் குறைந்த மேற்பார்வை காரணமாக காணி சுவீகரிப்பின் செயன்முன்னேற்றம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஏறத்தாழ 10 சதவீதமாக காணப்பட்டது. | நட்டஈட்டு திட்டங்களுக்காக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்கள். | கருத்துரை வழங்கப்படவில்லை. | முழுமையானதும் செயற்திறனானதுமான செயற்திட்ட முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | PMU செயற்பாடுகள் (செயல் நடவடிக்கைத் திட்டம்) | செயற்திட்ட முகாமைத்துவம் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பட்டியலிடப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், சட்டம் மற்றும் சுயாதீன அமைப்புக் கட்டமைப்பு என்பன மீளாய்வாண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு செயல்நடவடிக்கை திட்டம் மீளாய்வு செய்யப்படாமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டங்களை கண்காணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கேள்வி ஆவணங்களை தயாரிப்பதற்கான ஆலோசனை சேவை | ஆலோசனை சேவை | கேள்வி ஆவணங்களை 2020 யூன் 30 இற்கு முன்னர் தயாரித்து சமர்ப்பிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் ஆலோசனை நிறுவனத்திற்கு ரூபா 26.13 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமாக ஆலோசனைக் குழு திரட்டப்படாமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பட்டியலிடப்பட்ட காலப்பகுதியின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முழுமையானதும் செயற்திறனானதுமான செயற்திட்ட முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் மாலபேயில் இருந்து பத்தரமுல்லைக்கு செல்லும் பயன்பாட்டு பாதை மற்றும் கொழும்பு நகருக்குள் நிலத்தடி பயன்பாட்டு பாதையை மாற்றுதல் மற்றும் நிலத்தடி கேபிள் ஒட்டுதல் ஆகியவற்றிற்கான மூலப்பொருள் செயன்முறையை ஆரம்பிப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 36 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத்தில் 2021 யூலை வரையிலும் ரூபா 8 மில்லியன் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | முற்பணத்தை உடனடியாக அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 4 தனிப்பட்ட ஆலோசனையாளர்களுக்கு ரூபா 21.43 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் மீளாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அனைத்து தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 3,419.52 மில்லியன் பெறுமதியான 114 நாட்குறிப்பு பதிவுகள் தொடர்பான நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அனைத்து தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள் தொடர்பான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது செயற்திட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக, ஆலோசனை நிறுவனம் அதற்கு பெற வேண்டிய ஐ.அ.டொலர் 23.65 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ஐ.அ.டொலர் 31.36 மில்லியன் தொகையை கோரியிருந்தது, அவ் விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக 2021 பெப்ரவரி 23 இல் அமைச்சரவையால் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நியமனம் செய்யப்பட்ட குழு உடனடியாக இவ் விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும். |
| (ஆ) | ஆலோசனை நிறுவனம் வழங்கிய ஆலோசனை அறிக்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் செயற்திட்டத்தை பொது தனியார் பங்குபற்றல் | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளும் |

| | | | |
|---|---|---|---|
| | (PPP) செயற்திட்டமாக தொடர்வதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. எனினும், 2021 திசெம்பர் இறுதி வரை ஒன்றரை ஆண்டுகள் நிறைவடைந்த போதிலும் புதிய செயற்திட்டம் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | | பொருட்டு முழுமையானதும் ஆக்கபூர்வமானதுமான செயற்திட்ட முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் செயற்திட்டத்தை இடைநிறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் காரணமாக, மொத்த கடன் தொகையின் 0.2 சதவீதம் தொடர்பாக 2019 மே 23 இல் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன் இறுதிக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த ஜப்பான் யென் 60.08 மில்லியனுக்குச் சமமான ரூபா 102.73 மில்லியன் தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது. அத்துடன், கடன் வழங்கும் முகவரிற்கு (JICA) யென் 2,703.18 இற்கு சமமான ரூபா 4,622.45 மில்லியன் தொகையான கடனை மீளச் செலுத்தும் பொருட்டு முன்னணி முகவருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேவையற்ற செலவினங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி வரை கையளிப்பதற்கு பட்டியலிடப்பட்ட 16 ஆலோசனை அறிக்கைகளில், 11 அறிக்கைகள் மாத்திரமே ஆலோசனையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பெறப்பட்ட அறிக்கைகளில் 7 அறிக்கைகள் மாத்திரமே செயற்திட்டத்தால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆலோசனை உடன்படிக்கைகளின் பிரகாரம் தாமதமான 5 அறிக்கைகளிலிருந்து தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை, சேதங்களை அறவீடு செய்வதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மிகுதி ஆலோசனைப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் சேதத்தை அறவீடு செய்வதற்கு ஆலோசனை உடன்படிக்கைகளில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (உ) | கொழும்பில் நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலுக்கான நீண்டகால தீர்வொன்றாக ஜப்பானின் நிதியுதவியின் கீழ் இலகு ரயில் போக்குவரத்து செயற்திட்டம் 2017 மே 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க JICA நிதியில் இருந்து ரூபா 4,622.45 மில்லியன் தொகை மற்றும் திறைசேரி நிதியேற்பாட்டில் இருந்து ரூபா 923.18 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ரூபா 5,545.63 மில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் அச் செயற்திட்டம் தொடர்பாக செலவிடப்பட்டிருந்தது. குறித்த செயற்திட்டம் விலை உயர்ந்ததாக உள்ளதுடன் கிரயம் குறைந்தது அல்ல என்பதால், 2020 ஒக்தோபர் | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் முறையான சாத்தியவள ஆய்வு நடாத்தப்பட வேண்டும். |

06 ஆம் திகதிய 20/1450/312/002 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் செயற்திட்ட அலுவலகம் மூடப்படும் என்றும் செயற்திட்டத்தின் அனைத்து சொத்துக்களும் போக்குவரத்து அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கு கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட செலவினங்கள் பயனற்றதாகியிருந்தன.